වෙනස් වෙමු
වෙනස් කරමු

மாறுவோம்
மாற்றுவோம்

CLEAN
SRI LANKA
SOCIALLY · ENVIRONMENTALLY · ETHICALLY

# நேர்மையான அரச சேவைக்கான “நேர்மைக் கலாசாரம் – கிளீன் ஸ்ரீலங்கா” தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இலக்கம்: PS/CSL/Circular/8/2026 2026 ஜூலை மாதம் 14 ஆம் திகதி

அனைத்து ஆணைக்குழுக்களின் தலைவர்கள்
அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
அனைத்து மாவட்ட செயலாளர்கள்
அனைத்து திணைக்களத் தலைவர்கள்
அனைத்து பிரதேச செயலாளர்கள்
அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்
அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**நேர்மையான அரச சேவைக்கான "நேர்மைக் கலாசாரம் – *கிளீன் ஸ்ரீலங்கா*" தேசிய செயல்பாட்டை நடைமுறைப்படுத்துதல்**

இலங்கையின் ஒட்டுமொத்த அரச சேவையினதும் தரம், வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்தல், ஊழலற்ற முன்மாதிரியான நிர்வாகக் கட்டமைப்பினைக் கட்டியெழுப்புதல் ஆகியன தற்போதைய அரசின் முதன்மையான எதிர்பார்ப்பாக அமைந்துள்ளதுடன், இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் *கிளீன் ஸ்ரீலங்கா* தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து, அரச சேவையின் நெறிமுறை விழுமியங்களை வலுப்படுத்தல் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது.

02. கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலைமைகள் மற்றும் எரிசக்தி நெருக்கடி காரணமாக தேசிய நேர்மை வாரத்திற்காகத் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த முடியாதிருந்த போதும், அதன் மூலமான அனுபவங்களின் அடிப்படையில் மிகவும் தீர்க்கமான, நடைமுறைச் சாத்தியமான மற்றும் ஒட்டுமொத்த நாட்டையும் உள்ளடக்கும் வகையில் "நேர்மைக் கலாசாரம் - *கிளீன் ஸ்ரீலங்கா*" தேசிய நேர்மை வாரம் – 2026 ஐ எதிர்வரும் 2026 ஜூலை 27 ஆம் திகதி முதல் ஜூலை 31 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை வெறுமனே ஒரு வாரத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நினைவுதின விழாவாக கருதாது, அரச சேவையின் அடித்தளத்தை நிலையானதாக மாற்றியமைக்கும் குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்டகால வேலைத்திட்டத்திற்கான ஒரு அணுகுமுறையாகக் கருதிச் செயல்படல் வேண்டும்.

03. தனிப்பட்ட நன்மைகளைக் கருதாது பொதுமக்களின் நலனுக்கு எப்போதும் முன்னுரிமை வழங்கி, நெறிமுறை விழுமியங்கள் மற்றும் கொள்கை ரீதியான தரங்களுடன் ஒன்றிணைந்து, யாரும் பார்க்காதபோதும், எந்தவொரு மேற்பார்வையும் இல்லாதபோதும், தனக்குத்தானே சுய கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளும் சரியான மற்றும் தார்மீகச் செயற்பாடுகளின் ஊடாக, கனிவான சேவையை வழங்கும் நேர்மையான அரச உத்தியோகத்தரை உருவாக்குவதற்குத் தேவையான பின்னணியை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

04. ஆகவே, இந்த தேசிய நேர்மை வாரத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை நிறைவேற்றுவற்கு ஒவ்வொரு அரச நிறுவனத்தினதும் நிறுவனத் தலைவர் கட்டுப்பட்டுள்ளதுடன், அதன் செயற்பாடுகளை வழிநடத்துதல் ஒவ்வொரு நிறுவனத்திலும் தாபிக்கப்பட்டுள்ள உள்விவகார அலகுகள் (Internal Affairs Units - IAU) மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவரை அவ்வாறான உள்விவகார அலகுகளை தாபிக்காத

ගාලු මුවදොර, කොළඹ 01. காலி முகத்திடல், கொழும்பு 01. Galle Face, Colombo 01.
දුරකථන தொலைபேசி Telephones ++94 (0) 11 2354420 ++94 (0) 11 2473873
ෆැක්ස් தொலைநகல் Fax ++94 (0) 11 2446657
ඊ - තැපැල මின்னஞ்சல் E-mail prsec@presidentsoffice.lk

அரச நிறுவனங்களில், அவை தாபிக்கப்படும் வரை இந்த தேசிய செயல்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான அலுவலர்களைக் கொண்ட நேர்மைக் குழுவொன்றை (Integrity Committee) உடனடியாக தாபிப்பதற்கு ஏற்புடைய நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. அதற்கமைய, இந்த தேசிய நேர்மை வாரத்திற்குள் பின்வரும் கருப்பொருள்களின் கீழ், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களால் ஒவ்வொரு அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களையும் இணைத்து அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

| திகதி | பிரதான கருப்பொருள் | நேரடியாகப் பொறுப்புக்கூறும் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் அலுவலகக் கட்டமைப்பு |
|---|---|---|
| 2026 ஜூலை 27<br>திங்கட்கிழமை | நிறுவன ரீதியான நேர்மையை மேம்படுத்தும் நாள்<br>**"சட்டத்தை மதிக்கும் நேர்மைமிக்க அரச சேவை"** | 1. சனாதிபதி அலுவலகம்<br>2. பிரதம அமைச்சர் அலுவலகம்<br>3. பாதுகாப்பு அமைச்சு<br>4. பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (அனைத்து மாகாண சபைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் உள்ளடங்கலாக)<br>5. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு<br>6. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு<br>7.வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு |
| 2026 ஜூலை 28<br>செவ்வாய்க் கிழமை | நிதி, டிஜிட்டல், தொழில் முயற்சியாண்மை மற்றும் தொழில்நுட்ப நேர்மையை மேம்படுத்தும் நாள்<br>**"நேர்மைமிக்க, டிஜிட்டல் அரச சேவை"** | 1. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு<br>2. டிஜிட்டல் பொருளாதார அமைச்சு<br>3. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு<br>4.கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு<br>5. வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு |
| 2026 ஜூலை 29<br>புதன்கிழமை<br>(எசல பௌர்ணமி தினம்) | ஆன்மீக, நெறிமுறை, கலாசார மற்றும் சமூக நேர்மையை மேம்படுத்தும் நாள்<br>**“மனித மாண்பு நிறைந்த நேர்மைமிக்க சமூகம்"** | 1. புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு<br>2. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு<br>3. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு<br>4.இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு<br>5. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு |
| 2026 ஜூலை 30<br>வியாழக்கிழமை | செயற்பாட்டு, உட்கட்டமைப்பு, சேவை வழங்கல் மற்றும் உழைப்பு நேர்மையை மேம்படுத்தும் நாள்<br>**“வெளிப்படையான, நேர்மைமிக்க செயற்பாட்டு வலையமைப்பு"** | 1. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு<br>2. வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சு<br>3. துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு |

| | | |
|---|---|---|
| | | 4. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு<br>5. கைத்தொழில் அமைச்சு |
| 2026<br>ஜூலை 31<br>வெள்ளிக்கிழமை | சுற்றாடல், வள முகாமைத்துவ, கிராமிய மற்றும் சமூக வலுவூட்டல் நேர்மையை மேம்படுத்தும் நாள்<br><br>**"நிலையான நேர்மைமிக்க பசுமைக் கலாசாரம்"** | 1. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு<br>2. பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு<br>3. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு<br>4.எரிசக்தி அமைச்சு<br>5. சுற்றாடல் அமைச்சு |

06. அதற்கமைய, மேற்கூறிய திகதிகளில் உள்ள கருப்பொருள்களின் கீழ் ஏற்புடைய அமைச்சுக்களும் அதனுடன் தொடர்புடைய ஒவ்வொரு அரச நிறுவனமும் பின்வரும் அறிவுறுத்தல்களின்படி செயலாற்ற வேண்டும்:

I. **தேசிய நேர்மை வாரத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடல்:**

**அ)** இந்த தேசிய நேர்மை வாரத்துடன் இணைந்ததாக, ஒவ்வொரு அரச நிறுவனமும் நிறுவன நேர்மையை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை கட்டாயமாக அடையாளம் காண வேண்டும். இதன்போது, தற்போது உள்விவகார அலகுகள் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களால் அடையாளம் காணப்பட்டுள்ள நேர்மைச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழுள்ள செயற்பாடுகளைச் செயலூக்கத்துடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்பதுடன், ஏனைய அரச நிறுவனங்கள் நேர்மையை மேம்படுத்தும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்டகால திட்டங்களாகத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

**ஆ)** மேற்கூறிய செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது, ஒவ்வொரு அரச நிறுவனத்தினதும் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாள் தொகுதியின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கு கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக, **இணைப்பு இல.**01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேர அட்டவணையைப் பயன்படுத்தல் வேண்டும்.

**இ)** அதற்கமைய, தேசிய நேர்மை வாரத்திலிருந்து இந்த ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதியில், குறுங்கால செயற்பாடுகளின் கீழ் பொதுமக்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்தல், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாக ரீதியான தடைகளைக் குறைத்தல், சமத்துவம் மற்றும் பக்கச்சார்பின்மை, நிதி ஒழுக்கம் மற்றும் சட்டத்தை மதித்தல், பெறுகை வெளிப்படைத்தன்மை, முன்மாதிரியான தலைமைத்துவம், தகவல்களை வெளிப்படுத்துபவர்களைப் பாதுகாத்தல் மற்றும் தார்மீகப் பொறுப்பு ஆகிய விழுமியங்களைப் பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை அடையாளம் கண்டு, இந்த தேசிய நேர்மை வாரத்தில் ஆரம்பித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

**ஈ)** தேசிய நேர்மை வாரத்தின் ஆரம்ப நாளான ஜூலை 27 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு நாடு முழுவதிலுமுள்ள அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அனைத்து அலுவலர்களும் **தேசிய நேர்மை சத்தியப்பிரமாணத்தை/ உறுதிமொழியை (இணைப்பு இல. 02)** நிறுவன மட்டத்தில் ஒன்றுகூடி வாசிக்க வேண்டும் என்பதுடன், அந்த முன்மாதிரியின் மூலம் அரச சேவையின் கௌரவம், வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனைப் பாதுகாப்பதற்கு அனைவரும் அர்ப்பணிக்க வேண்டும்.

**உ)** நேர்மையான அரச சேவைக்கான "நேர்மைக் கலாசாரம் - *கிளீன் ஸ்ரீலங்கா*" தேசிய செயல்பாட்டின் அடையாளமாக, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தலைமையில், அனைத்து மாவட்ட மட்டத்திலும் நேர்மைப் பேரணிகளை ஏற்பாடு செய்தல், நேர்மை மற்றும் பொதுமக்களின் பொறுப்பு குறித்து விழிப்புணர்வூட்டல் தொடர்பில் கிராம மட்டத்தில் பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் நேர்மை பற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டல் போன்ற அடையாளம் காணப்பட்ட விசேட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**ஊ)** மேலும், இந்த தேசிய நேர்மை வாரத்துடன் இணைந்ததாக, அனைத்து அரச நிறுவனங்களும் தமது பணியாள் தொகுதி மற்றும் சேவை பெறுநர்கள் பார்வையிடக் கூடியவாறு, "*கிளீன் ஸ்ரீலங்கா*" வின் 10 முன்மாதிரிகளை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் காட்சிப்படுத்த வேண்டும்.

**எ)** அத்துடன், "நேர்மைக் கலாசாரம் - *கிளீன் ஸ்ரீலங்கா*" தேசிய செயல்பாடு பற்றிய பதாகையை (6x4 அடி), 2026.07.27 ஆம் திகதி முதல் அனைத்து அலுவலகங்களிலும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான வடிவமைப்பு மாதிரியை (Design) **இணைப்பு இல. 03** இன் கீழ் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்ய முடியும்.

**II. சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை அனுஷ்டித்தல்**

மேலும் இந்த தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்காக, எதிர்வரும் டிசம்பர் 09 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தின் போது, மேலே உப-இல.06 (I) (ஆ) இன் கீழ் உங்களது நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்ட நடுத்தரகால மற்றும் நீண்டகால செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து, தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல் வேண்டும்.

07. "நேர்மைக் கலாசாரம் - *கிளீன் ஸ்ரீலங்கா*" நேர்மையான அரச சேவைக்கான தேசிய செயல்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான உள்விவகார அலகுகள் (Internal Affairs Units - IAU) மூலம் செயலூக்கமான முறையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுள் மிகச் சிறந்த செயலாற்றுகையை வெளிக்காட்டிய உள்விவகார அலகுகள், அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களைப் பாராட்டுவதற்கான **"தேசிய நேர்மை விருதுகள் - 2026"** விருது வழங்குதல் சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்துடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கான வழிகாட்டல் தேசிய நேர்மை வாரத்தில் வெளியிடப்படும்.

08. "நேர்மைக் கலாசாரம் - *கிளீன் ஸ்ரீலங்கா*" நேர்மையான அரச சேவைக்கான தேசிய செயல்பாட்டை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக நிறுவன மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்டகால திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை, **cslintegrity@presidentsoffice.lk** எனும் மின்னஞ்சல் முகவரி மூலம் மாத்திரம் அறிக்கையிடுவதற்கு அனைத்து நிறுவனத் தலைவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

09. இச்செயற்பாடுகளுக்குத் தேவையான நிதித் தேவைகளை ஆரம்பத்தில் தமது நிறுவன வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளிலிருந்து முகாமை செய்துகொள்ள வேண்டும் என்பதுடன், அத்தியாவசிய மற்றும் விசேட செயற்பாடுகளுக்காக சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்கள் ஊடாக மேலதிக ஒதுக்கீடுகளைக் கோர முடியும்.

10. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான உள்விவகார அலகுகளை இதுவரை தாபிக்காத நிறுவனங்கள் மேலே உப-இல. 04 இன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்புடைய நேர்மைக் குழுவை தாபித்து, அதன் "பிரதான ஒருங்கிணைப்பு அலுவலரின்" பெயர், பதவி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை 2026 ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் cslintegrity@presidentsoffice.lk எனும், *கிளீன் ஸ்ரீலங்கா* செயலகத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11. நாட்டின் ஒருசில நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களிடம் வேரூன்றியுள்ள ஊழல் மனப்பாங்கினை அகற்றி, அலுவலர்களிடம் உள்ளார்ந்த மாற்றத்தை ஏற்படுத்தி, வெறும் அலுவலக ரீதியான கோப்பு மட்டத்தில் மட்டுமின்றி வெளிக்கள மட்டம் வரை பொதுமக்கள் உணரும் வகையில் அமையப்பெற்ற நேர்மைச் சமூகமயமாக்கல் தற்போதைய அரசின் பிரதான நோக்கமாகும். அதற்கமைய, இச்சுற்றறிக்கை தொடர்பில் **உங்களுக்கு கீழ் செயல்படும் அனைத்து நிறுவனத் தலைவர்களையும் அறிவூட்டி** இலங்கையை நேர்மையான தேசமாக மாற்றுவதற்கான இந்த தனிச்சிறப்பு வாய்ந்த தேசிய செயல்பாட்டுக்கு அவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

12. இச்சுற்றறிக்கை தொடபில் மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு 011 2 354 354 எனும் இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி உள்இணைப்பு இலக்கம் 2617 ஐத் தொடர்பு கொள்ளவும் அல்லது cslintegrity@presidentsoffice.lk எனும் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும்.

**ஒப்பம்/ கலாநிதி என். எஸ். குமாநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

**பிரதிகள்:**

1. அனைத்து மாகாண ஆளுநர்கள்
2. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள்
3. பிரதம அமைச்சரின் செயலாளர்
4. பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
5. கணக்காய்வாளர் தலைமையதிபதி

## நேர்மையான அரச சேவைக்கான "நேர்மைக் கலாசாரம் – *கிளீன் ஸ்ரீலங்கா*" தேசிய செயல்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான நேர அட்டவணை

அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் இந்தத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய பணிகளைத் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட திகதிகளுக்கு இணங்க எவ்வித தாமதமுமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| தொ. இல | செயற்பாடு / சமர்ப்பிக்க வேண்டிய வரைவுகள் | இலக்குத் திகதி / இறுதித் திகதி |
|---|---|---|
| 01 | உள்விவகார அலகுகள் (IAU) நிறுவப்படாத நிறுவனங்களில் தற்காலிகமாக நிறுவப்படும் நேர்மைக் குழுக்களை நிறுவுதலும் ஒருங்கிணைப்பு அதிகாரியின் விபரங்களை அனுப்பிவைத்தலும். | 2026 ஜூலை 20 அல்லது அதற்கு முன் |
| 02 | குறுகிய காலச் செயற்பாட்டுத் திட்டங்களை *கிளீன் ஸ்ரீலங்கா* செயலகத்திற்குச் சமர்ப்பித்தல். | 2026 ஜூலை 24 அல்லது அதற்கு முன் |
| 03 | நேர்மை சத்தியப்பிரமாணம் / உறுதியுரையை வாசித்தல் (நாடளாவிய ரீதியில் உள்ள அரச நிறுவனங்களில்). | 2026 ஜூலை 27 மு.ப. 09.00 மணி |
| 04 | நிறுவன வளாகத்தினுள் *கிளீன் ஸ்ரீலங்கா* வின் 10 முன்மாதிரிகளையும் பதாகையையும் (Banner) காட்சிப்படுத்துதல். | 2026 ஜூலை 27 முதல் தொடர்ந்து |
| 05 | இனங்காணப்பட்ட குறுகிய கால நேர்மைச் செயற்பாடுகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துதல். | 2026 ஜூலை 27 - டிசம்பர் 31 |
| 06 | நேர்மை நடைபவனியை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்துதல். | 2026 ஜூலை 28 மு.ப. 09.00 மணி |
| 07 | நடுத்தர கால மற்றும் நீண்ட காலச் செயற்பாட்டுத் திட்டங்களை *கிளீன் ஸ்ரீலங்கா* செயலகத்திற்குச் சமர்ப்பித்தல். | 2026 அக்டோபர் 15 அல்லது அதற்கு முன் |
| 08 | சர்வதேச ஊழல் எதிர்ப்பு தின அனுஷ்டிப்பு மற்றும் நடுத்தர/நீண்ட காலச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் | 2026 டிசம்பர் 09 |
| 09 | செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை மற்றும் பௌதீக முன்னேற்றங்களை *கிளீன் ஸ்ரீலங்கா* செயலகத்திற்கு இற்றைப்படுத்துதல் | ஒவ்வொரு மாத இறுதித் திகதிக்கும் முன்னர் |

**நேர்மை சத்தியப்பிரமாணம் / உறுதியுரை - 2026**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
கௌரவமிக்க அரச ஊழியராகிய நான்,
கடமைகளின்போது, ஒட்டுமொத்த அரச சேவையின் முன்னேற்றத்திற்காக
என்னிடம் காணப்படும் குறைபாடுகளையும் பலவீனங்களையும் இனங்கண்டு,
முன்னுதாரணமாக என்னை மாற்றியமைத்துக் கொள்வதற்கும்,
அதற்கேற்ப என்னைச் சுற்றியுள்ள பணிச் சூழலிலும் சமூகத்திலும்
நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும்,
தனிப்பட்ட நலன்களை விடவும்
எப்போதும் பொதுமக்களின் நலனுக்கு முன்னுரிமை வழங்குவதாகவும்,
எவ்வித வெளிப்புறக் கண்காணிப்பும் இல்லாத போதிலும்,
எனது மனச்சாட்சிக்கு இணங்க சுய கட்டுப்பாட்டுடன்
எப்போதும் சரியான மற்றும் தார்மீக ரீதியான விடயங்களை மாத்திரமே செய்வதாகவும்,
அரச சேவையின் அடிப்படையான வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல்,
நிதி ஒழுக்கம் மற்றும் சட்டத்திற்கு மதிப்பளித்தல் ஆகிய விழுமியங்களை
எனது அன்றாடக் கடமைகளில் பின்பற்றுவேன் என்றும்,
அரச நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து இலஞ்சம், ஊழல், வீண்விரயம்,
நலன்களுக்கிடையிலான முரண்பாடு, குடும்பப் பற்று மற்றும் வினைத்திறனற்ற தன்மை
ஆகியவற்றை முற்றாக ஒழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும்,
என்னை நாடி வரும் ஒவ்வொரு சேவைபெறுநருக்கும்
எவ்வித பாகுபாடுமின்றி, சமத்துவத்துடனும்
கனிவுடனும் சேவையாற்றக் கடமைப்பட்டுள்ளேன் என்றும்,
**“நேர்மை கலாசாரம் – கிளீன் ஸ்ரீலங்கா”**
தேசிய செயல்பாட்டுக்கு எனது முழுப் பங்களிப்பை வழங்குவேன்
என்றும் இத்தால் சத்தியப்பிரமாணம் செய்கிறேன் / உறுதியளிக்கிறேன்!

ක්ලීන් ශ්‍රී ලංකා පරමාදර්ශ 10 සහ “සුපිළිපන් සංස්කෘතියක් - ක්ලීන් ශ්‍රී ලංකාවක්” ජාතික මෙහෙයුමේ බැනරයට අදාළ නිර්මාණ ආකෘතිය (Design) පහත සැබැදිය මඟින් භාගත කර ගත හැක.

கிளீன் ஸ்ரீ லங்கா 10 முன்மாதிரிகள் மற்றும் "நேர்மைக் கலாசாரம் - கிளீன் ஸ்ரீ லங்கா" தேசிய திட்டத்தின் பதாகைக்கான (Banner) வடிவமைப்பு மாதிரியை (Design) பின்வரும் இணைப்பின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்."

The design format related to the banner of the 10 Clean Sri Lanka Values and the national initiative “A Culture of Integrity – A Clean Sri Lanka” can be downloaded through the link provided below.

**Link -**
**https://drive.google.com/drive/folders/1fvGL2tpBUlvUp722FekRk_NxGYhWqSE6?usp=sharing**

**QR -**